798

# பொன்மொழி வாசகம்



MADRAS
798
1-55
TB
031(1)
N54
147784

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்

# பொன் மொழி வாசகம்

## (முதற் புத்தகம்)

-600 008

ஆசிரியர்கள் :

**புலவர் பு. செல்வராசனுர்,**
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

**ஆபிரகாம் அருளப்பன்**, B. A.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அர்ச். சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை.

பதிப்பாசிரியர் :

**சு. சே. உமாபதி**, M. A., L. T., (Dip. in. Geog.)
தலைமையாசிரியர்
சி. அப்துல் ஹகிம் இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை.

சித்ரா பப்ளிஷிங் ஹௌஸ்
ஸ்ரீ வைகுண்டம்

பதிப்புரிமை] 1954 [விலை அணு 5

முதற் பதிப்பு 1954

TB
O81(C1) N54

47784
சென்னை-600 008.

Printed at the B. N. Press, Mount Road, Madras.

## முன்னுரை

'பொன் மொழி வாசகம்' என்னும் பெயரோடு வெளிப் போதரும் தமிழ் வாசக வரிசையில் இது முதல் நூலாகும். இது 1941-ஆம் ஆண்டில் அரசியலார் வெளியிட்ட பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுளது. இதன்கண் பாடத்திட்டத்திற் குறிப்பிட்டுள்ளவாறு குழந்தைகளுக்கு எளிதில் விளங்கக் கூடிய முந்நூறு சொற்கள் சேர்க்கப் பெற்றுள்ளன.

மொழிப் போதனையில் மொழிப் பயிற்சி இன்றியமையாதது. இம்மொழிப் பயிற்சிக்கு உறுதுணையாவது உரையாடல். உரையாடலுக்குத் துணைபுரியுமாறு முதல் மூன்று பக்கங்களில் முப்பத்தாறு படங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைச் சுட்டி, வினு விடை முறையில் உரையாடல் மிகவும் அவசியமாகும்.


இந்நூலில் 4–ஆவது பக்கம் முதல் 9–ஆவது பக்கம் வரை உயிரெழுத்துக்கள் கற்பித்தற்குரிய பாடங்கள் இருக்கின்றன. பின்னர் 10–ஆவது பக்கம் முதல் 14–ஆவது பக்கம் வரை 15 மெய்யெழுத்துக்களும், 15 அகரம் ஏறிய உயிர் மெய்களும் கற்பித்தற்குரிய பாடங்கள் உள்ளன.

இவற்றின் துணைகொண்டு 16–ஆவது பக்கம் முதல் 22–ஆவது பக்கம் வரை பிற உயிர்மெய் எழுத்துக்களைக் கற்பித்தற்குரிய பாடங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இப் பாடங்கள் ஒவ்வொன்றிலும் கற்பிக்கப்பட வேண்டிய எழுத்துக்கள் சொற்களில் தடித்த உருவில் குறிக்கப்பெற்றுள்ளன. அவ்வாறில்லாத எழுத்துக்கள் ஏற்கெனவே கற்பிக்கப்பட்டவை என்பது அறியத்தக்கதாம். குழந்தை உள்ளத்தைக் கவரத்தக்க சில இனிய எளிய பாட்டுக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர்களும் அறிஞர்களும் இந்நூல் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்குப் பயன்படுமாறு செய்வார்களென நம்புகிறேன்.


சென்னை
7—11—54

ஆசிரியர்கள்.


# படங்களின் பெயர்களைச் சொல்லச் செய்தல்





## படங்களின் பெயர்களைச் சொல்லச் செய்தல்



## படங்களின் பெயர்களைச் சொல்லச் செய்தல்



உயிர் எழுத்துக்களைக் கற்பித்தல்

அணில் அடுப்பு அம்மி

# அ






ஆடு ஆந்தை ஆணி


# ஆ

குறிப்பு:—ஒவ்வொரு பக்கத்திலும் கற்பிக்க வேண்டிய எழுத்துக்கள் தனியே கொடுக்கப்பட்டுள்ளன.




இலை    இறகு    இளநீர்


# இ



ஈ    ஈட்டி    ஈசல்




# ஈ






உரல் உலக்கை உடல்

**உ**


ஊஞ்சல் ஊசி ஊதல்

**ஊ**




எலி   எறும்பு   எருது

# எ



ஏணி   ஏற்றம்   ஏர்

# ஏ



ஐவர் ஐயர் ஐந்து

# ஐ



ஒட்டியாணம் ஒட்டன் ஒட்டகம்

# ஒ



ஓணான்



ஓடம்



ஓட்டம்

# ஓ



ஔவையார்


ஔ



ஔடதம்


# ஔ

குறிப்பு:—ஒவ்வொரு பாடத்திலும் தனியே தரப்பட்டுள்ள எழுத்துக்கள், கற்பிக்கப்பட வேண்டியவை.



படம் பம்பரம் பட்டம்


# ட் ட ப ம் ர



சட்டம் கட்டம் தட்டம்


# ச க த


600 008.


மரம் மடம் அப்பம்



ம ப் ப







சக்கரம் பழம் சப்பரம்

க் ழ


தச்சன்　　சன்னல்　　நகம்

# ச்　ன்　ன　ந

சங்கம்　　வட்டம்　　கண்

# ங்　வ　ண்




வயல் பணம் தந்தம்


# ய ல் ண ந்



ஏர் அய்யர் மஞ்சள்

# ர் ய் ஞ் ள்







பல் ஏற்றம் ஆலமரம்

# ற் ற ல

பயிற்சி

கோடுள்ள இடங்களைத் தகுந்த
எழுத்துக்களால் நிரப்பு.

ப — ம், பம்ப — ம், ச — டம்

அ — பம், ச — கரம், ச — னல்

கற்பிக்கப்பட்ட உயிர் எழுத்துக்கள்—12

அ ஆ இ ஈ உ ஊ

எ ஏ ஐ ஒ ஓ ஔ

கற்பிக்கப்பட்ட மெய் எழுத்துக்கள்—15

க் ங் ச் ஞ் ட் ண்

ந் ப் ம் ய் ர் ல்

ள் ற் ன்


கற்பிக்கப்பட்ட

(அகரம் ஏறிய) உயிர்மெய் எழுத்துக்கள்—15

க ச ட ண த ந


ப ம ய ர ல வ

ழ ற ன



# கண் காகம் கால்

| | | | |
|---|---|---|---|
| க | | | கா |
| ங | கண் | காகம் | ஙா |
| ச | சங்கம் | சால் | சா |
| ஞ | படம் | கடா | ஞா |
| ட | பணம் | அஞ | டா |
| ண | தந்தம் | தாழ்வாரம் | ணா |
| த | நகம் | நார் | தா |
| ந | மரம் | பாடம் | நா |
| ப | வயல் | மாடம் | பா |
| ம | பலம் | யார் | மா |
| ய | பழம் | ஊரார் | யா |
| ர | களம் | பலா | ரா |
| ல | கற | வாய் | லா |
| வ | கனம் | களா | வா |
| ழ | | | ழா |
| ள | | | ளா |
| ற | பலா மரம் | | றா |
| ன | காகம் பார். | | னா |



**கிளி　　　கீரி　　　மீன்**

கி ஙி சி ஞி டி ணி தி நி பி மி யி ரி லி வி ழி ளி றி னி

| | |
|---|---|
| கிளி | கீரி |
| விசிறி | சீனி |
| பிடி | தண்ணீர் |
| மணி | தீபம் |
| கத்தி | நீர் |
| நிலா | பீங்கான் |
| அம்மி | மீன் |
| பயிர் | வீதி |
| கரி | பன்னீர் |
| பல்லி | நீளம் |
| வழி | பீடம் |
| பனி | மீதி |

கீ ஙீ சீ ஞீ டீ ணீ தீ நீ பீ மீ யீ ரீ லீ வீ ழீ ளீ றீ னீ


வழி நீளம்.
கிளி பார்.
கீரி வால்



கூடு குரங்கு சூரியன்

| கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு | | | கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ றூ னூ |
|---|---|---|---|
| | குரங்கு<br>சுண்டல்<br>பட்டு<br>கணு<br>துணி<br>நுனி<br>புளி<br>முள்<br>கரும்பு<br>கழுவு<br>உளுந்து<br>கறுப்பு<br>அனுப்பு | கூடு<br>சூரியன்<br>குண்டூசி<br>பூணூல்<br>தூண்<br>நூல்<br>பூட்டு<br>மூக்கு<br>ரூபாய்<br>பலூன்<br>கூத்து<br>ஊற்று | |

சுறு மீன்
மரத் தூண்
குழாய் நீர்



செடி சேவல் தேங்காய்

கெ
ஙெ
செ
ஞெ
டெ
ணெ
தெ
நெ
பெ
மெ
யெ
ரெ
லெ
வெ
ழெ
ளெ
றெ
னெ

| | |
|---|---|
| கெட்டி | கேள் |
| செடி | சேவல் |
| எண்ணெய் | தேங்காய் |
| தெரு | நேர் |
| நெல் | பேன் |
| பெண் | மேளம் |
| மெல்ல | வேகம் |
| ரெட்டியார் | தேர் |
| வெள்ளி | வேலி |

கண்ணே வா.

நேரே நில்.

கீழே இறங்கு.

உள்ளே பார்.


கே
ஙே
சே
ஞே
டே
ணே
தே
நே
பே
மே
யே
ரே
லே
வே
ழே
ளே
றே
னே



குடை




பூனை



வலை

| | |
|---|---|
| கை | கை விரல் |
| ஙை | மேசை அறை |
| சை | குடை எங்கே ? |
| ஞை | வீணைக் கம்பி |
| டை | கதைப் புத்தகம் |
| ணை | பட்டுப் பை |
| தை | மைனா முட்டை |
| நை | வாயை மூடு. |
| பை | அரை ரூபாய் |
| மை | வலை வீசு. |
| யை | கீழே வை. |
| ரை | வாழை மரம் |
| லை | காளை மாடு |
| வை | அறையை மூடு |
| ழை | பூனை வால் |
| ளை | |
| றை | |
| னை | |



கோவில் தொட்டி சோழி

கொ
ஙொ
சொ
ஞொ
டொ
ணொ
தொ
நொ
பொ
மொ
யொ
ரொ
லொ
வொ
ழொ
ளொ
றொ
னொ

| | |
|---|---|
| கொக்கு | கோவில் |
| சொல் | சோளம் |
| தொட்டி | தோசை |
| நொண்டி | நோன்பு |
| பொன் | போளி |
| மொட்டை | மோர் |
| ரொட்டி | ரோசா |

கொவ்வைப் பழம்
பொன் முட்டை
ரொட்டித் துண்டு
சோளக் கொல்லை
பாலோடு நீர்
ரோசா மலர்
நீர் மோர்
மைசூர் போண்டா

கோ
ஙோ
சோ
ஞோ
டோ
ணோ
தோ
நோ
போ
மோ
யோ
ரோ
லோ
வோ
ழோ
ளோ
றோ
னோ



வௌவால் ஔவை கௌதாரி

கௌ
ஙௌ
சௌ
ஞௌ
டௌ
ணௌ
தௌ
நௌ
பௌ
மௌ
யௌ
ரௌ
லௌ
வௌ
ழௌ
ளௌ
றௌ
னௌ

ஔவைப் பாட்டி

கௌதாரி பார்.

பௌர்ணமி நாள்


மௌனம் ஏன் ?

பயிற்சி

கோடுள்ள இடத்தில் தகுந்த எழுத்தை எழுது.

பு — தக —, நாற் — லி,
தண் — ர், குழா — ,
— ட்டி, கொ — டை,
சு — — ல், பல —.


## பயிற்சி




படங்களின் பெயர்களைக் கீழே பார். அவற்றில் விடுபட்ட எடுத்துக்களைக் கோட்டில் நிரப்பு.

1. க—காரம்
2. அ—மான்
3. —சை
4. தி—ட்சை
5. பு—
6. —ட்சுமி
7. பா—பு
8. —ர்
9. —ங்—ம்
10. —ரசுவதி
11. மோ-டார்
12. யா—
13. கு—ங்கு
14. சா—
15. ஓ—ம்
16. —டை

பயிற்சி



படங்களின் பெயர்களைக் கீழே பார். அவற்றில் விடுபட்ட எழுத்துக்களைக் கோட்டில் நிரப்பு.

| | | |
|---|---|---|
| 1. ஓ—ன் | 6. ம—ல் | 11. மா— |
| 2. பல்— | 7. க—கு | 12. கா— — |
| 3. பா—பு | 8. ஆ—தை | 13. —சு |
| 4. —ணில் | 9. குரு— | 14. —ரு— |
| 5. கோ— | 10. குயி— | 15. எ—மை |
| | | 16. ப—றி |

சென்னை-600 008.

# பாட்டு




காக்கா, காக்கா,
கண்ணுக்கு மை
கொண்டுவா !


குருவி, குருவி,
கொண்டைக்குப் பூ
கொண்டுவா !

கொக்கு, கொக்கு,
குழந்தைக்குத் தேன்
கொண்டுவா !

கிளியே, கிளியே,
கிண்ணத்தில் பால்
கொண்டுவா !



# பழங்கள்



வாழைப்பழம்

மாம்பழம்

பலாப்பழம்

அன்னாசிப்பழம்

திராட்சைப்பழம்

கொய்யாப்பழம்

மா துளம்பழம்

முலாம்பழம்

வெள்ளரிப்பழம்

கிச்சிலிப்பழம்

எலுமிச்சம்பழம்

நாவற்பழம்


ஆப்பில்பழம்

# மரங்கள்



ஆல மரம்

தென்னை மரம்






ஈச்ச மரம்

மா மரம்






பாக்கு மரம்

பலா மரம்





பனை மரம்

வாழை மரம்



# காய்கள்



பூசனிக்காய்

கத்தரிக்காய்





வாழைக்காய்

மிளகாய்





புடலங்காய்


மாங்காய்





பாகற்காய்


சுரைக்காய்





முருங்கைக்காய்

வெண்டைக்காய்



# பூக்கள்




சம்பங்கிப் பூ



கனகாம்பரம் பூ




தாழம் பூ



மல்லிகைப் பூ



ரோசாப் பூ



தாமரைப் பூ




சாமந்திப் பூ



சூரியகாந்திப் பூ

வேறு இரண்டு பூக்களின் பெயர்களை எழுது.

# வாகனங்கள்



ஒற்றை மாட்டு வண்டி

இரட்டை மாட்டு வண்டி

குதிரை வண்டி

டிராம் வண்டி

மோட்டார் வண்டி

சைக்கில் வண்டி

மோட்டார் சைக்கில்

ரிக்ஷா வண்டி

கப்பல்

படகு

ஆகாய விமானம்

இரயில் வண்டி




# பாட்டு

கைவீசு அம்மா கைவீசு!

கடைக்குப் போகலாம் கைவீசு!

மிட்டாய் வாங்கலாம் கைவீசு!

மெதுவாய்த் தின்னலாம் கைவீசு!

சட்டை வாங்கலாம் கைவீசு!


சொகுசாய்ப் போடலாம் கைவீசு!

பொம்மை வாங்கலாம் கைவீசு!

பொன்னே மணியே கைவீசு!

TB N54

# விளையாட்டுக்கள்




1. பந்து விளையாட்டு

2. கோலி ஆட்டம்

3. நொண்டி அடித்தல்

4. கைகோத்து ஆடல்

5. பம்பரம் சுழற்றல்

6. பட்டம் பறக்கவிடல்




# உணவுப் பொருள்கள்

| | | |
|---|---|---|
| அரிசி | சீரகம் | சர்க்கரை |
| பருப்பு | வெந்தயம் | வெல்லம் |
| உப்பு | கடுகு | கற்கண்டு |
| புளி | மிளகு | காப்பித் தூள் |
| மிளகாய் | உளுந்து | தேயிலை |

விடை எழுது :

மூன்று பருப்பு வகைகளின்
பெயர்களைக் கூறு.




# உடைகள்

வேட்டி　　　　பாவாடை


துண்டு　　　　சட்டை

பனியன்　　　　புடைவை

சரிகை வேட்டி

பட்டுப் புடைவை

கால் சட்டை




பாட்டு


பாலைப் பொழிந்துதரும் பாப்பா - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா ;
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா ! 1.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை - நெல்
வயலில் உழுதுவரும் மாடு ;
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு-இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா ! 2.

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தின் இனியதடி பாப்பா - நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா! 3.

—சி. சுப்பிரமணிய பாரதியார்

# மிருகங்கள்




பசு பால் கொடுக்கும்.

எருது ஏர் உழ உதவும்.

குதிரை வண்டி இழுக்கும்.

கழுதை மூட்டை சுமக்கும்.

எருமை பால் கொடுக்கும்.

மான் வேகமாக ஓடும்.

யானை மிருகங்களில் பெரியது.


ஆடு சாதுவான மிருகம்.

புலி காட்டில் வசிக்கும்.

ஒட்டகம் உயரமான மிருகம்.

பூனை எலி பிடிக்கும்.


# பறவைகள்



ஆந்தை மரப்பொந்தில்
வசிக்கும்.
கழுகு பிணம் தின்னும்.
வாத்து நீரில் நீந்தும்.
காகம் கரையும்.

கோழி கூவும்.
மயில் தோகை விரித்து
ஆடும்.
குருவி சிறிய பறவை.
கிளி சொன்னதைச்
சொல்லும்.
புரு வெகுதூரம் பறக்கும்.
குயில் இனிமையாகக்
கூவும்.
தீப்பறவை பறவைகளில்
உயரமானது.
கொக்குமீனைக்கொத்தும்.

# எண்கள்



ஒன்று - எல்லார்க்கும்
தலை ஒன்று.—1

இரண்டு - யாவர்க்கும்
கண்கள் இரண்டு.—2

மூன்று - முக்காலிக்குக்
கால்கள் மூன்று.—3

நான்கு - கட்டிலின்
கால்கள் நான்கு.—4

ஐந்து - கையில் விரல்கள்
ஐந்து.—5

ஆறு - வண்டுக்குக்
கால்கள் ஆறு.—6

ஏழு - வாரத்தில் நாட்கள்
ஏழு.—7

எட்டு - சிலந்திக்குக்
கால்கள் எட்டு.—8

ஒன்பது - இரத்தினங்
களின் வகை ஒன்பது.—9

பத்து-இரண்டு கைகளின்
விரல்கள் பத்து.—10



# கிளிப் பாட்டு

பச்சைக் கிளியே வா வா !
பாலும் சோறும் உண்ணவா ! 1

இச்சை யாகப் பேசவா !
இன்று என்கைமேல் ஏறிவா ! 2

ஐந்து நிறங்கள் உன்னிடத்தில்
அமைந்த அழகைப் பார்த்தேனே. 3

வந்தென் கைமேல் அமர்ந்துநீ
வாய்தி றந்து பேசவா. 4

வளைந்த மூக்கைப் பார்த்தேனே ;
வாழைப் பழம்நான் தருவேனே. 5

கிளையின் மேலே ஏனுள்ளாய் ?
கிட்டே வருவாய் பசுங்கிளியே ! 6

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை



# பண்டிகைகள்

1. தீபாவளிப் பண்டிகை
2. விநாயக சதுர்த்தி
3. சரஸ்வதி பூசை
4. கார்த்திகைத் தீபம்
5. நவராத்திரி விழா
6. மொகரம் பண்டிகை
7. புத்தர் அவதார நாள்
8. பொங்கல் திருநாள்
9. கிறிஸ்துமஸ் பண்டிகை

**தெய்வம் ஒன்றே.**

**தெய்வம் தொழு.**

# மாதங்கள் - கிழமைகள்

| | | |
|---|---|---|
| சித்திரை | ஆவணி | மார்கழி |
| வைகாசி | புரட்டாசி | தை |
| ஆனி | ஐப்பசி | மாசி |
| ஆடி | கார்த்திகை | பங்குனி |

தமிழ் மாதங்கள் பன்னிரண்டு


| | |
|---|---|
| ஞாயிற்றுக் கிழமை | புதன் கிழமை |
| திங்கள் கிழமை | வியாழக் கிழமை |
| செவ்வாய்க் கிழமை | வெள்ளிக் கிழமை |

சனிக் கிழமை

ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.
முப்பது நாட்கள் கொண்டது ஒரு மாதம்.
பன்னிரண்டு மாதங்கள் கொண்டது
ஓர் ஆண்டு.

விடை எழுது :

1. கிழமைகள் எத்தனை ?
2. ஒரு வாரத்துக்கு எத்தனை நாட்கள் ?
3. ஒரு மாதத்துக்கு எத்தனை நாட்கள் ?



# தொழில்கள்


1. மண்பாண்டம் செய்பவர் குலாலர்.
2. மரவேலை செய்பவர் தச்சர்.
3. பொன் வேலை செய்பவர் தட்டார்.
4. இரும்பு வேலை செய்பவர் கொல்லர்.
5. பித்தளைப் பாத்திரம் செய்பவர் கன்னார்.
6. துணிகளை வெளுப்பவர் சலவைத் தொழிலாளி.
7. நிலத்தை உழுபவர் உழவர்.
8. உடைகள் தைப்பவர் தையற்காரர்.



# நிலாப் பாட்டு



நிலா நிலா வாவா !
நில்லாமல் ஓடிவா !
மலைமேலே ஏறிவா !
மல்லிகைப்பூ
கொண்டுவா !
நடுவீட்டில் வையே ;
நல்ல துதி செய்யே !
வெள்ளிக்
கிண்ணத்தில்
பாலும் சோறும்
அள்ளி அள்ளி ஊட்டு;
குழந்தைக்குச்
சிரிப்புக் காட்டு.




# எனது வகுப்பு அறை

1. இது எனது வகுப்பு அறை.
2. நாங்கள் பெஞ்சுகளில் உட்கார்வோம்.
3. ஆசிரியர் நாற்காலியில் உட்கார்வார்.
4. நாற்காலியின் எதிரில் மேசை இருக்கிறது.
5. மேசையின் அருகில் கரும்பலகை இருக்கிறது.
6. உபாத்தியாயர் பாடம் கற்றுக் கொடுக்கிறார்.
7. நாங்கள் பாடம் படிக்கிறோம்.



# எனது ஊர்

1. இது எனது ஊர்.
2. இதில் உள்ள வீடுகளைப் பார்.
3. தெருக் கோடியில் கோயில் இருக்கிறது.
4. எனது ஊரைச் சுற்றி வயல்கள் உள்ளன.
5. உழவர்கள் வயலில் உழுவார்கள்.
6. எனது ஊரில் பள்ளிக்கூடம் இருக்கிறது.
7. நான் தினந்தோறும் பள்ளிக்கூடம் போவேன்.

# மயிலும் குயிலும்

1. மயிலின் படத்தைப் பார்.

2. அது அழகிய பறவை.


3. மயில் அதிக தூரம் பறக்க முடியாது.

4. ஆண் மயில் தோகை விரித்து ஆடும்.

5. குயில் கருமையான பறவை.

6. அது மாஞ்சோலையில் வசிக்கும்.

7. அது இனிமையாகக் கூவும்.



# மாடும் குதிரையும்

1. மாட்டுக்குக் கொம்புகள் உண்டு.
2. குதிரைக்குக் கொம்புகள் இல்லை.
3. மாட்டுக்குத் திமில் உண்டு.
4. குதிரைக்குத் திமில் இல்லை.
5. குதிரைக்குப் பிடரி மயிர் உண்டு.
6. மாடு வேகமாக ஓடாது.
7. குதிரை வேகமாக ஓடும்.
8. மாடு வண்டி இழுக்கும்; குதிரையும் வண்டி இழுக்கும்.



# தாத்தா சொல்வதைக் கேள்

1. அதிகாலையில் எழுந்திரு.
2. பற்களைச் சுத்தம் செய்.
3. முகத்தைக் கழுவு.
4. உடம்பைத் தேய்த்துக் குளி.

147784

5. கடவுளை நினைத்து வணங்கு.
6. பெற்றோர் சொல்வதைக் கேள்.
7. தினமும் பள்ளிக்கூடம் போ.
8. ஆசிரியருக்கு வணக்கம் செய்.
9. எல்லோரிடத்தும் அன்பாய் இரு.

RTA
829

# PONMOZHI VACHAGAM

I STANDARD

By

Pulavar P. SELVARAJAN
&
ABRAHAM ARULAPPAN, B.A.

CHITRA PUBLISHING HOUSE
SRIVAIKUNTAM

Copyright]. 1954 [Price: As. 5